# தினசரி நடப்பு நிகழ்வுகள்

# 5 பிப்ரவரி 2021

## முக்கிய நாட்கள்

**கண்டுபிடிப்பாளர் ஜான் பாய்ட் டன்லப் பிறந்த தினம் இன்று!!**

- முக்கியமான பல கண்டுபிடிப்புகளை இந்த உலகிற்கு தந்தவர் தான், ஜான் பாய்ட் டன்லப்.
- இவர் சைக்கிளை எளிதாக ஓட்ட வான்வழி சக்கரத்தை கண்டுபிடித்தவர் ஆவார்.
- டன்லப் எனப்படும் டயர் நிறுவனத்தின் நிறுவனரும் இவர் தான்.

## தேசிய நிகழ்வுகள்

**இந்தியாவில் 12 அணு உலைகளை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது!!**

- இந்தியாவில் தற்போது 22 அணு உலைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த அணு உலைகளில் இருந்து மொத்தமாக 6,780 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.
- இவைகளுடன் மேலும் புதிதாக 12 அணு உலைகளை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- இதனை மத்திய அணுசக்திதுறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் மக்களவை கூட்டதில் உறுதி செய்துள்ளார்.

**மத்திய அணுசக்திதுறை பற்றி**

**நிறுவப்பட்டது: 1954**

**தலைவர்: கே.என். வியாஸ்**

**நிறுவனர்: ஹோமி பாபா**

**2020 - 2021 ஆம் நிதியாண்டில் காவல்துறையினர் மீதான மனித உரிமை மீறல் பட்டியல் வெளியீடு!!**

- 2020 -2021 ஆம் நிதியாண்டில் இந்தியாவில் உள்ள காவல்துறையினர் மீதான மனித உரிமை மீறல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

- இந்த பட்டியலில் உத்தர பிரதேஷ மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. இந்த பட்டியலில் தமிழகம் மூன்றாம் இடத்தில் உள்ளது.
- இந்த நிதியாண்டில் மட்டும் நாடு முழுவதும் 11,130 வழக்குகள் மனித உரிமை மீறல் வழக்குகளாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**2020 ஆம் ஆண்டிற்கான சிறந்த இந்தி வார்த்தையாக "ஆத்மநிர்பார்த்தா" தேர்தெடுப்பு!!**

- 2020 ஆம் ஆண்டிற்கான சிறந்த இந்தி வார்த்தையினை ஆக்ஸ்போர்டு மொழிகள் நிறுவனம் தேர்வு செய்துள்ளது.
- "ஆத்மநிர்பார்த்தா" (aatm nirbhar bharat) என்பதே அந்த வார்த்தை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த வார்த்தைக்கான அர்த்தம் self reliance என்பதே ஆகும். அதாவது "சுயசார்பு"

## பாதுகாப்பு நிகழ்வுகள்

**156 பாதுகாப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்ய DRDO ஒப்புதல் அளித்துள்ளது!!**

- இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு 156 பாதுகாப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்ய DRDO (Defence Research and Development Organisation) தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- பாதுகாப்பு உபகரணங்களின் பட்டியலையும் தற்போது DRDO வெளியிட்டுள்ளது.
- இந்த பட்டியலில் 9 வானூர்தி உபகரணங்கள், 16 அணு-உயிரியல்-இரசாயன உபகரணங்கள், 41 ஆயுதங்கள் மற்றும் போர் உபகரணங்கள், 28 கடற்படை சம்பந்தமான உபகரணங்கள், 27 மின்னணு மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகள், 10 உயிர் பாதுகாப்பு பொருட்கள், 4 ஏவுகணை அமைப்புகள், 4 மைக்ரோ எலக்ட்ரானிக் சாதனங்கள் மற்றும் 7 பாதுகாப்பு சம்பந்தமாக பிற சாதனங்கள் இடம் பெற்றுள்ளன.

**DRDO பற்றி**

**தலைவர் - டாக்டர் ஜி சதீஷ் ரெட்டி**

**தலைமையகம்- புது டெல்லி**

**நிறுவப்பட்டது – 1958**

## ஒப்பந்தங்கள்

**HAL நிறுவனம் MIDHANI நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது!!**

- HAL (Hindustan Aeronautics Limited) நிறுவனம் MIDHANI (Mishra Dhatu Nigam Limited) என்ற நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- 2021 ஆம் ஆண்டில் கலப்பு மூலப்பொருட்களின் வளர்ச்சி மற்றும் உற்பத்தியினை அதிகரிக்க இந்த ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.
- கலப்பு மூலப்பொருட்களுக்காக கையெழுத்திடப்பட்ட முதல் ஒப்பந்தம் இதுவே ஆகும்.

**HAL பற்றி**

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் - ஸ்ரீ ஆர் மாதவன்**

**தலைமையகம்- பெங்களூரு**

**மிதானி பற்றி**

**தலைவரும் நிர்வாக இயக்குநருமான டாக்டர் சஞ்சய் குமார் ஜா**

**தலைமையகம்- ஹைதராபாத்**

**உணவு டெலிவரி செய்யும் நிறுவனமான சோமாடோவுடன் MoHUA ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டியுள்ளது!!**

- MoHUA (Ministry of Housing and Urban Affairs) உணவுகளை டெலிவரி செய்யும் நிறுவனமான சோமாடோவுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தியாவில் உணவுகளை விற்கும் தெருவோர விற்பனையாளர்களின் வாழ்வாதாரத்திருக்காகவும், அவர்களது பொருளாதார நலத்திற்காகவும் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- இத்துடன் இந்த அமைச்சகம் கூடுதலாக ஒரு மொபைல் ஆப்பையும் அறிமுகப்படுத்தியுள்ளது.
- மத்திய அரசு அறிவித்து வரும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதே இந்த செயலியின் கடமை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநில நிகழ்வுகள்

**5 லட்சம் கொரோனா தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்கியுள்ள முதல் மாநிலமாக உத்தர பிரதேச மாநிலம் உருவாகியுள்ளது!!**

- இந்தியாவில் முதல் முறையாக உத்தர பிரதேச மாநிலம் 5 லட்சம் கொரோனா தடுப்பூசிகளை மக்கள் வழங்கியுள்ளது.
- இந்தியாவில் உள்ள பல மாநிலங்கள் கொரோனா தடுப்பூசிகளை மக்களுக்கு தொடர்ந்து வழங்கி வருகின்றது.

## தமிழக நிகழ்வுகள்

**தமிழகத்தில் நேற்று ஆன்லைன் ரம்மி விளையாட்டினை தடை செய்ய மசோதா தாக்கல்!!**

- இணையவழியில் விளையாடும் ஆன்லைன் ரம்மி விளையாட்டினை தடை செய்வதற்கான சட்ட மசோதா நேற்று தமிழக சட்ட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

- இனி இந்த மசோதா மூலமாக ஆன்லைன் ரம்மி விளையாடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.
- இந்த விளையாட்டினை விளையாடுபவர்களுக்கு 5000 ரூபாய் அபராதமும் 6 மாத கால சிறைத்தண்டனையும் வழங்கப்படும், அதே போல் ரம்மி விளையாட்டு அரங்கம் வைத்திருப்பவர்களுக்கு 10000 ரூபாய் அபராதமும், 2 சிறைத்தண்டனையும் வழங்கப்படும்.

**தமிழகத்தின் சென்னை காவல் துறை "தோழி" என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது!!**

- பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உளவியல் ரீதியான ஆலோசனைகளை வழங்க சென்னை காவல் துறை "தோழி" என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளின் வீட்டிற்கே நேரடியாக சென்று ஆலோசனை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த "தோழி" காவல்துறையில் தனி பிரிவாக செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள் & சாதனைகள்

**ICC அமைப்பின் புதிய துணைத்தலைவராக இம்ரான் குவாஜா நியமனம்!!**

- சர்வதேச கிரிக்கெட் அமைப்பான ICC தனது புதிய துணைத்தலைவராக இம்ரான் குவாஜா என்பவரை நியமித்துள்ளது.
- கடந்த 2008 ஆம் ஆண்டு இவர் ICC அமைப்பின் அடிப்படை உறுப்பினராக சேர்ந்தார்.
- கடந்த ஆண்டு இவர் ICC அமைப்பின் தற்காலிக தலைவராக சஷாங்க் மனோகர் என்பவருக்கு பதிலாக செயலாற்றினார்.

**ICC அமைப்பு பற்றி**

**தலைவர் - கிரெக் பார்க்லே**

**துணைத்தலைவர் - இம்ரான் குவாஜா**

**நிறுவப்பட்டது – 1909**

**பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக செல்வம் நியமனம்!!**

- திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக செல்வம் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் அழகப்பா பல்கலைக்கழத்தில் பேராசிரியராக இருந்து வருகிறார். இவர் நியமனத்திற்கான உத்தரவினை ஆளுநர் பன்வாரிலால் புரோகித் பிறப்பித்துள்ளார்.

- ஆசிரியர் துறையில் இவருக்கு 35 ஆண்டுகள் அனுபவம் உள்ளது. பல ஆய்வு கட்டுரைகளை இவர் சமர்ப்பித்துள்ளார்.




**தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் புதிய தலைவராக எஸ்.என். சுப்பிரமணியம் நியமனம்!!**

- தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் (National Safety Council) புதிய தலைவராக எஸ்.என். சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் இந்த கவுன்சிலின் நிர்வாக தலைவர் மற்றும் இயக்குனராக அடுத்த 3 ஆண்டுகள் இருப்பார் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- உலகின் சிறந்த கட்டுமான நிறுவனமான L&T என்ற நிறுவனத்தில் பல ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவம் இவருக்கு உள்ளது.

**நாட்டின் மிக இளம் வயது விமானியாக 25 வயதான ஆயிஷா என்பவர் சாதனை புரிந்துள்ளார்!!**

- ஜம்மு & காஷ்மீரின் யூனியன் பிரதேசத்தினை சேர்ந்த ஆயிஷா ஆசிஸ் என்ற 25 வயதான பெண் நாட்டின் இளம் வயது பெண் என்ற சாதனையை புரிந்துள்ளார்.
- இவர் தனது 15 வயதிலேயே மிக் - 29 என்ற விமானத்தினை இயக்க பயிற்சி பெற்றுள்ளார்.
- மும்பையில் உள்ள பிளையிங் கிளப் என்ற அமைப்பிடம் இருந்து கடந்த 2007 ஆம் ஆண்டு விமானத்தினை இயக்குவதற்கான அங்கீகாரத்தினை பெற்றுள்ளார்.